**111/2026-T**

Question Booklet Alpha Code: **A**

Question Booklet Serial Number: **113469**

Total No. of questions : 100

Time : 75 Minutes

Maximum : 100 Marks

## INSTRUCTIONS TO CANDIDATES

1. The question paper will be given in the form of a Question Booklet. There will be four versions of question booklets with question booklet alpha code viz. A, B, C & D.
2. The Question Booklet Alpha Code will be printed on the top left margin of the facing sheet of the question booklet.
3. The Question Booklet Alpha Code allotted to you will be noted in your seating position in the Examination Hall.
4. If you get a question booklet where the alpha code does not match to the allotted alpha code in the seating position, please draw the attention of the Invigilator IMMEDIATELY.
5. The Question Booklet Serial Number is printed on the top right margin of the facing sheet. If your question booklet is un-numbered, please get it replaced by new question booklet with same alpha code.
6. The question booklet will be sealed at the middle of the right margin. Candidate should not open the question booklet, until the indication is given to start answering.
7. Immediately after the commencement of the examination, the candidate should check that the question booklet supplied to him contains all the 100 questions in serial order. The question booklet does not have unprinted or torn or missing pages and if so he/she should bring it to the notice of the Invigilator and get it replaced by a complete booklet with same alpha code. This is most important.
8. A blank sheet of paper is attached to the question booklet. This may be used for rough work.
9. **Please read carefully all the instructions on the reverse of the Answer Sheet before marking your answers.**
10. Each question is provided with four choices (A), (B), (C) and (D) having one correct answer. Choose the correct answer and darken the bubble corresponding to the question number using Blue or Black Ball-Point Pen in the OMR Answer Sheet.
11. **Each correct answer carries 1 mark and for each wrong answer 1/3 mark will be deducted. No negative mark for unattended questions.**
12. No candidate will be allowed to leave the examination hall till the end of the session and without handing over his/her Answer Sheet to the Invigilator. Candidates should ensure that the Invigilator has verified all the entries in the Register Number Coding Sheet and that the Invigilator has affixed his/her signature in the space provided.
13. Strict compliance of instructions is essential. Any malpractice or attempt to commit any kind of malpractice in the Examination will result in the disqualification of the candidate.

SEAL

Maximum : 100 marks

Time : 1 hour and 15 minutes

1. மத்திய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து விவசாயிகளுக்கு நேரடியாகப் பலன்களை வழங்கும் ஒருங்கிணைந்த டிஜிட்டல் அமைப்பின் பெயர் என்ன?

   (A) இ - கிராம ஸ்வராஜ் (B) பஞ்சம்
   (C) இக்னைட் (D) அக்ரிஸ்டேக்

2. 2025-ஆம் ஆண்டிற்கான நாட்டின் சிறந்த வட்டாரப் பஞ்சாயத்துக்கான 'நானாஜி தேஷ்முக் சர்வாத்தம் பஞ்சாயத்து சதத் விகாஸ்' விருதை கேரளாவின் எந்த வட்டாரப் பஞ்சாயத்து பெற்றது?

   (A) ஹரிப்பாடு (B) மேலுகாவு
   (C) நிரனம் (D) ஒட்டூர்

3. ஜூலை 1, 2026 அன்று நடைமுறைக்கு வரும் 'விகசித் பாரத் கேரண்டி ஃபார் ரோஜ்கார் ஆஜீவிகா மிஷன்' (வி.பி.ஜி. ராம் ஜி.) திட்டத்தில் எத்தனை நாட்கள் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது?

   (A) 100 (B) 125
   (C) 140 (D) 160

4. மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்காக மத்திய அரசு அறிவித்துள்ள இலவச உதவித் திட்டம் எது?

   (A) பி.எம். ஜீவன் ஜோதி பீமா யோஜனா
   (B) இ-ஸ்ரம்
   (C) பி.எம். ஜன் ஆரோக்கிய யோஜனா
   (D) பி.எம். ராகத்

5. 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் குழந்தைகள் பாலின விகிதம் என்னவாக இருந்தது?

(A) 914
(B) 927
(C) 940
(D) 945

6. இந்தியாவின் தேசியப் பாடலான 'வந்தே மாதரம்' முதன்முதலில் எப்போது வெளியிடப்பட்டது?

(A) 1875
(B) 1882
(C) 1896
(D) 1950

7. அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுக்கூட்டத்தில் உள்ள எந்தத் தீவில், உலகின் மிகப்பெரிய தேசியக் கொடியை நீருக்கடியில் அமைப்பதன் மூலம் கின்னஸ் உலக சாதனை படைக்கப்பட்டது?

(A) லிட்டில் அந்தமான்
(B) நீல் தீவு
(C) ராஸ் தீவு
(D) சுயராஜ் தீவு

8. ஹன்டா வைரஸ் தொற்று பாதிப்பு குறித்துத் தகவல் தெரிவித்த உலகின் முதல் சொகுசுப் பயணக் கப்பல் எது?

(A) ஈகிள் ஹாமில்டன்
(B) அம்பிஷன்
(C) எம்.வி. ஹோண்டியஸ்
(D) சில்வர் எண்டெவர்

9. இந்தியாவின் புதிய முப்படைகளின் தலைமைத் தளபதி யார்?

(A) ஜெனரல் உபேந்திர திவிவேதி
(B) ஜெனரல் என்.எஸ். ராஜா சுப்ரமணி
(C) அட்மிரல் கிருஷ்ணா சுவாமிநாதன்
(D) ஜெனரல் அனில் சௌஹான்

10. 'வி சர்வ் ட்டு சேவ்' என்பது யாருடைய குறிக்கோள் வாசகம்?

(A) கேரள தீயணைப்புப் படை
(B) கேரளக் காவல்துறை
(C) கேரள கலால் துறை
(D) கேரள ஊர்க்காவல் படை

11. பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பதிலடியாக இந்தியா எப்போது 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையைத் தொடங்கியது?

(A) ஏப்ரல் 22, 2025
(B) மே 7, 2025
(C) ஜூன் 14, 2025
(D) ஜூலை 28, 2025

12. பின்வருவனவற்றில் சரியான கூற்றுகளைக் கண்டறியவும் :

(i) அக்னி-5 : இந்தியாவின் அதிநவீன நீண்ட தூர ஏவுகணை

(ii) தனுஷ் : இந்தியாவின் கப்பல் சார்ந்த குறுகிய தூர ஏவுகணை

(iii) எரேசர் : நீர்மூழ்கிக் கப்பல்களை அழிக்கப் பயன்படும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்திய ஏவுகணை

(iv) கைடட் பினாகா : இந்தியாவால் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அதிநவீன பல-குழல் ஏவுகணை அமைப்பு

(A) (i), (ii) மற்றும் (iii) ஆகியவை சரியானவை
(B) (ii), (iii) மற்றும் (iv) ஆகியவை சரியானவை
(C) (i), (iii) மற்றும் (iv) ஆகியவை சரியானவை
(D) அனைத்தும் சரியானவை

13. பின்வருவனவற்றில் சரியான கூற்றுகளைக் கண்டறியவும்:

(i) சுமன் பெரி : நிதி ஆயோக்கின் தலைமை நிர்வாக அதிகாரி

(ii) சஞ்சய் மல்ஹோத்ரா : ரிசர்வ் வங்கியின் ஆளுநர்

(iii) சஷி சேகர் வேம்பதி : தணிக்கைக் குழுவின் தலைவர்

(iv) சௌரப் விஜய் : இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் தலைமை நிர்வாக அதிகாரி

(A) (i), (ii) மற்றும் (iii) ஆகியவை சரியானவை
(B) (ii), (iii) மற்றும் (iv) ஆகியவை சரியானவை
(C) (i), (iii) மற்றும் (iv) ஆகியவை சரியானவை
(D) அனைத்தும் சரியானவை

14. கேரளாவில் நம்பூதிரிப் பெண்களிடையே 'மறக்குட பகிஷ்கரண யாத்திரை' என்பதை முன்னின்று நடத்திய மறுமலர்ச்சிப் பெண்மணி யார்?

(A) ஆர்யா பள்ளம்

(B) பார்வதி நென்மினிமங்கலம்

(C) கே.சி. நாராயணி அம்மா

(D) சாரதா அம்மாள்

15. கேரளாவின் சில சமூக சீர்திருத்தவாதிகள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. தவறான இணையைக் கண்டறியவும்:

| | | |
|---|---|---|
| (i) மன்னத்து பத்மநாபன் | : | கேரளாவின் மதன் மோகன் மாளவியா |
| (ii) வேலுகுட்டி அரயன் | : | கேரளாவின் லிங்கன் |
| (iii) அய்யத்தன் கோபாலன் | : | கேரளாவின் ராஜா ராம் மோகன் ராய் |
| (iv) வாக்படானந்தா | : | மலபாரின் ஸ்ரீ நாராயண குரு |

(A) (i) தவறானது

(B) (ii) தவறானது

(C) (iii) மற்றும் (iv) தவறானவை

(D) (i), (iii) மற்றும் (iv) தவறானவை

16. இடைக்கால கேரளாவில் கோழிக்கோட்டில் இருந்து ஆட்சி செய்த சாமுதிரி எந்த ஸ்வரூபத்தை சேர்ந்தவர்?

(A) பெரும்படப்பு ஸ்வரூபம்

(B) திரிப்பாப்பூர் ஸ்வரூபம்

(C) நெடியிருப்பு ஸ்வரூபம்

(D) கோல ஸ்வரூபம்

17. கேரளாவில் ஐரோப்பிய ஆக்கிரமிப்புக்கு எதிரான முக்கிய எதிர்ப்புகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றின் சரியான காலவரிசையை அடையாளம் காணவும் :

(i) குளச்சல் போர்

(ii) பழசி கிளர்ச்சிகள்

(iii) ஆட்டிங்கல் கிளர்ச்சி

(iv) குறிச்சியா கிளர்ச்சி

(A) (i), (ii), (iv), (iii)

(B) (ii), (i), (iii), (iv)

(C) (iii), (i), (ii), (iv)

(D) (iv), (ii), (i), (iii)

18. 1931-32-இல் நடைபெற்ற குருவாயூர் சத்தியாகிரகத்தின் ஒரு பகுதியாக கோயில் நுழைவு தொடர்பான பொதுக் கருத்தை அறிய வாக்கெடுப்பை நடத்திய தாலுக்கா எது?

(A) திருச்சூர்
(B) குன்னம்குளம்
(C) சாவக்காடு
(D) பொன்னானி

19. திருவிதாங்கூர் மற்றும் கொச்சியின் ஒருங்கிணைப்பு - ஒருங்கிணைந்த கேரளாவை உருவாக்குவதற்கான ஒரு முக்கிய படி எப்போது நடந்தது?

(A) ஜூன் 1, 1949
(B) ஜூலை 1, 1949
(C) நவம்பர் 1, 1949
(D) நவம்பர் 1, 1956

20. கேரளாவின் மிகப்பெரிய சுவரோவியமான 'கஜேந்திரமோக்ஷம்' எந்த அரண்மனையில் அமைந்துள்ளது?

(A) கிருஷ்ணாபுரம் அரண்மனை

(B) ஹில் பேலஸ்

(C) பத்மநாபபுரம் அரண்மனை

(D) கனகக்குன்னு அரண்மனை

21. உலகின் மிக நீளமான ஒற்றை-தூண் தொங்கு பாலமான டான்ஜியாங் பாலம் எந்த நாட்டில் அமைந்துள்ளது?

(A) சீனா
(B) ஜப்பான்
(C) தைவான்
(D) சைபீரியா

22. இந்தியாவின் 18-வது ரயில்வே மண்டலமான தென் கடற்கரை ரயில்வே மண்டலத்தின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

(A) கொல்கத்தா
(B) பிலாஸ்பூர்
(C) செகந்திராபாத்
(D) விசாகப்பட்டினம்

23. ஃபோர்ப்ஸ் வெளியிட்ட 2025-ஆம் ஆண்டிற்கான சிறந்த வங்கிகளின் பட்டியலில் கேரளாவைச் சேர்ந்த எந்த வங்கி இடம்பெறவில்லை?

(A) சவுத் இந்தியன் வங்கி
(B) ஃபெடரல் வங்கி
(C) தனலட்சுமி வங்கி
(D) கேரள கிராமின் வங்கி

24. மாநில கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட கூட்டுறவு வங்கிகளை ஒன்றிணைத்து கேரள வங்கி உருவாக்கப்பட்டபோது, அதனுடன் இணையாத ஒரே மாவட்ட கூட்டுறவு வங்கி எது?

(A) கண்ணூர் மாவட்ட கூட்டுறவு வங்கி
(B) கோழிக்கோடு மாவட்ட கூட்டுறவு வங்கி
(C) மலப்புரம் மாவட்ட கூட்டுறவு வங்கி
(D) திருச்சூர் மாவட்ட கூட்டுறவு வங்கி

25. கேரளாவில் தனியார் பங்களிப்புடன் அமைக்கப்பட்ட முதல் சிறிய அளவிலான நீர்மின் திட்டம் எது?

(A) மட்டுப்பெட்டி திட்டம்
(B) மீன்வல்லம் திட்டம்
(C) மணியார் திட்டம்
(D) ஆனக்கயம் திட்டம்

26. ஈரானில் உள்ள சபஹார் துறைமுகத்தை இயக்கும் பொறுப்பைக் கொண்ட நாடு எது?

(A) அமெரிக்கா
(B) இஸ்ரேல்
(C) இந்தியா
(D) கத்தார்

27. பூமத்திய ரேகை கடந்து செல்லும் ஒரே ஆசிய நாடு எது?

(A) இந்தோனேசியா
(B) வியட்நாம்
(C) கம்போடியா
(D) தாய்லாந்து

28. 'எல் நினோ' என்பது எந்தப் பெருங்கடலில் ஏற்படும் ஒரு காலநிலை நிகழ்வாகும்?

(A) அட்லாண்டிக் பெருங்கடல்
(B) ஆர்க்டிக் பெருங்கடல்
(C) இந்தியப் பெருங்கடல்
(D) பசிபிக் பெருங்கடல்

29. புற ஊதாக் கதிர்களை உறிஞ்சி பூமியில் உள்ள உயிரினங்களைப் பாதுகாக்கும் ஓசோன் படலம், வளிமண்டலத்தின் எந்த அடுக்கில் அமைந்துள்ளது?

(A) ட்ரோபோஸ்பியர்
(B) ஸ்ரேடோஸ்பியர்
(C) மீஸோஸ்பியர்
(D) எக்ஸோஸ்பியர்

30. "இயற்கையிலிருந்து உத்வேகம் பெற்று, பருவநிலைக்காக, நமது எதிர்காலத்திற்காக" என்ற அதிகாரப்பூர்வ கருபொருள் 2026-ஆம் ஆண்டில் எந்த நாளைக் கொண்டாடுவதற்கானது?

(A) உலக வானிலை ஆய்வு நாள்
(B) பூமி நாள்
(C) உலகப் பெருங்கடல்கள் நாள்
(D) உலக சுற்றுச்சூழல் நாள்

31. இந்தியத் தேர்தல் ஆணையம் 2025-ல் எந்த மாநிலத்தில் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த (SIR) திட்டத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்தியது?

(A) மேற்கு வங்காளம்
(B) பீகார்
(C) புதுச்சேரி
(D) அஸ்ஸாம்

32. எந்தத் தேர்தலின்போது கேரள சட்டமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை 140-ஆக உயர்த்தப்பட்டது?

(A) 1967 (B) 1977

(C) 1980 (D) 1982

33. கனிமசார் சட்டங்கள் பின்வருவனவற்றுள் எதன் கீழ் வருகின்றன?

(A) மத்தியப் பட்டியல்

(B) மாநிலப் பட்டியல்

(C) பொதுப் பட்டியல்

(D) எஞ்சிய அதிகாரங்கள்

34. இந்தியாவில் பஞ்சாயத்து ராஜ் முறையை முதன்முதலில் செயல்படுத்திய மாநிலம் எது?

(A) கேரளா (B) ஆந்திரப் பிரதேசம்

(C) ராஜஸ்தான் (D) உத்தரப் பிரதேசம்

35. கேரளாவில் செயற்கை நுண்ணறிவுத் துறைக்கு பொறுப்பான அமைச்சர் யார்?

(A) என். ஷம்சுதீன்

(B) குன்ஹாலிகுட்டி

(C) ரமேஷ் சென்னிதாலா

(D) ரோஜி எம். ஜான்

36. சைபர் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளுக்காக கிளாட் மித்தோஸ் பிரிவியூ மற்றும் கிளாட் கோட் செக்யூரிட்டி ஆகிய செயற்கை நுண்ணறிவு கருவிகளை உருவாக்கிய அமெரிக்க நிறுவனம் எது?

(A) என்விடியா (B) ஆர்பிண்ட்

(C) ஆந்த்ரோபிக் (D) டேட்டாமின்

37. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் குறித்த சில கூற்றுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. சரியானவற்றைக் கண்டறியவும் :

(i) விண்வெளி நிலையத்தில் மாரத்தான் ஓடிய முதல் நபர்

(ii) விண்வெளியில் அதிக நேரம் 'விண்வெளி நடை' மேற்கொண்ட பெண்மணி

(iii) ஜூன் 2024-ல் போயிங் ஸ்டார் லைனர் விண்கலத்தில் ஒரு வாரகாலப் பயணத்திற்காக விண்வெளிக்குச் சென்றவர்

(iv) மார்ச் 2025-ல் ஸ்பேஸ்எக்ஸின் க்ரூ-11 விண்கலத்தில் பூமிக்குத் திரும்பியவர்

(A) (ii) மற்றும் (iv) ஆகியவை சரியானவை

(B) (ii), (iii) மற்றும் (iv) ஆகியவை சரியானவை

(C) (i) மற்றும் (iii) ஆகியவை சரியானவை

(D) அனைத்தும் சரியானவை

38. பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தலைத் தடுப்பதற்கான சட்டம் எது?

(A) POCSO சட்டம்

(B) POSH சட்டம்

(C) பாரதிய நியாய சன்ஹிதா

(D) விசாகா கைடுலைன்ஸ்

39. பணமோசடியைத் தடுக்கவும், அவ்வாறு ஈட்டப்பட்ட சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் இந்திய நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் எது?

(A) ஊழல் வெளிக்கொணர்வோர் பாதுகாப்புச் சட்டம்

(B) மத்திய ஊழல் தடுப்பு ஆணையச் சட்டம்

(C) பி.எம்.எல்.ஏ. சட்டம்

(D) லோக் பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம்

40. கீழே பட்டியலிடப்பட்டுள்ள திட்டங்களில் சரியானவற்றை அடையாளம் காணவும் :

(i) ஆபரேஷன் ப்ராஜெக்ட் ஜீரோ : ஊழலற்ற கேரளாவை உருவாக்கும் நோக்கில் ஊழல் தடுப்புத் துறையால் அறிவிக்கப்பட்ட ஒரு புதிய முயற்சி

(ii) ஜனனி : போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிராக கேரள உள்துறையால் தொடங்கப்பட்ட சமீபத்திய முயற்சி

(iii) கிட் க்ளோவ் ப்ராஜெக்ட் : இணைய அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பு பெறுவது குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த கேரள காவல்துறையால் தொடங்கப்பட்ட முயற்சி

(iv) அன்பு வீடு : மாற்றுத்திறனாளிகளின் பாதுகாவலர்கள் இல்லாத சூழலில் அவர்களுக்குப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கேரள சமூக நீதித் துறையால் தொடங்கப்பட்ட புதிய திட்டம்

(A) (i), (ii) மற்றும் (iv) ஆகியவை சரியானவை

(B) (ii), (iii) மற்றும் (iv) ஆகியவை சரியானவை

(C) (i), (iii) மற்றும் (iv) ஆகியவை சரியானவை

(D) (i), (ii) மற்றும் (iii) ஆகியவை சரியானவை

41. இந்தியர்களான ஆர்.கே. ஆனந்த் மற்றும் சுபர்ணா சர்மா ஆகியோர் 2026-ஆம் ஆண்டில் எந்தப் பிரிவில் அமெரிக்காவின் புலிட்சர் பரிசைப் பெற்றனர்?

(A) ஆய்வுசார் இதழியல்

(B) சிறப்புப் புகைப்படக்கலை

(C) முக்கியச் செய்தி அறிக்கை

(D) முக்கியச் செய்திப் புகைப்படக்கலை

42. 2026-ஆம் ஆண்டிற்கான பத்ம விருது பெற்றவர்களில், கலைத் துறையில் 'பத்மஸ்ரீ' விருதைப் பெற்ற கேரளாவைச் சேர்ந்தவர் யார்?

(A) மம்முட்டி

(B) பி. நாராயணன்

(C) விமலா மேனன்

(D) கொல்லக்கயில் தேவகி அம்மா

43. 2026-ஆம் ஆண்டு கேன்ஸ் திரைப்பட விழாவின் 'கேன்ஸ் கிளாசிக்ஸ்' பிரிவில் திரையிடப்பட்ட ஒரே மலையாளத் திரைப்படம் எது?

(A) அம்மா அறியான்

(B) பாலன்: தி பாய்

(C) சேஷிப்பு - தி ரெம்னன்ட்

(D) ஷேடோஸ் ஆஃப் தி மூன்லெஸ் நைட்

44. 'ஆகாச மிட்டாய்' என்ற கலாச்சார மையம் எந்த எழுத்தாளரின் நினைவாகக் கட்டப்பட்டது?

(A) எஸ்.கே. பொட்டேகாடு

(B) வைக்கம் முஹம்மது பஷீர்

(C) எம்.டி. வாசுதேவன் நாயர்

(D) பி. குன்ஹிராமன் நாயர்

45. 'கன்னியார்களி' என்பது எந்த மாவட்டத்தில் மட்டுமே உள்ள ஒரு சடங்கு கலை வடிவம்?

(A) வயநாடு

(B) காசர்கோடு

(C) இடுக்கி

(D) பாலக்காடு

46. வளர்ந்து வரும் நாடுகளின் சர்வதேசக் கூட்டமைப்பான 'பிரிக்ஸ்' அமைப்பில் கடைசியாக இணைந்த நாடு எது?

(A) எத்தியோப்பியா

(B) எகிப்து

(C) இந்தோனேசியா

(D) சீனா

47. மக்கள் தொகை விவகாரங்களுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பான ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியத்தின் (யு.என்.எஃப்.பி.எ.) தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

(A) ஜெனிவா
(B) பாரிஸ்
(C) லண்டன்
(D) நியூயார்க் நகரம்

48. பின்வருவனவற்றுள் எது நார்டிக் நாடுகளில் அடங்காது?

(A) நார்வே
(B) ரஷ்யா
(C) டென்மார்க்
(D) ஸ்வீடன்

49. 'ஈ-ஸ்போர்ட்ஸ்' தொடர்பான சரியான கூற்றுகளைக் கண்டறியவும் :

(i) ஜகார்த்தாவில் நடைபெற்ற 2018 ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 'ஈ-ஸ்போர்ட்ஸ்' முதன்முறையாக ஒரு செயல்விளக்க நிகழ்வாக சேர்க்கப்பட்டது.

(ii) ஹாங்சூவில் நடைபெற்ற 2023-ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 'ஈ-ஸ்போர்ட்ஸ்' அதிகாரப்பூர்வ பதக்கம் வெல்லும் போட்டியாகச் சேர்க்கப்பட்டது.

(iii) தேசிய விளையாட்டு நிர்வாகச் சட்டம் 2025-ன் கீழ் இந்தியாவில் 'ஈ-ஸ்போர்ட்ஸ்' ஒரு அதிகாரப்பூர்வ விளையாட்டாக அறிவிக்கப்பட்டது.

(iv) இந்தியாவில் 'ஈ-ஸ்போர்ட்ஸ்' போட்டிகளை 'ஈ-ஸ்போர்ட்ஸ் ஃபெடரேஷன் ஆஃப் இந்தியா' ஒழுங்குபடுத்துகிறது.

(A) (i), (ii) மற்றும் (iii) ஆகியவை சரியானவை
(B) (ii), (iii) மற்றும் (iv) ஆகியவை சரியானவை
(C) (i), (ii) மற்றும் (iv) ஆகியவை சரியானவை
(D) அனைத்தும் சரியானவை

50. 2026-கால்பந்து உலகக் கோப்பைக்காக, மலையாளியான தஹ்சின் முஹம்மது ஜம்ஷீத் எந்த நாட்டின் அணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்?


(A) ஈரான்
(B) கத்தார்
(C) சவுதி அரேபியா
(D) நியூசிலாந்து

51. $4.67+5\frac{3}{4}$ =

(A) 10.42 (B) 9.42

(C) 10.32 (D) 9.32

52. படத்தில் இரண்டு சதுரங்கள் வரையப்பட்டுள்ளன. சிறிய சதுரத்தின் பக்க அளவு ஒரு சென்டிமீட்டர் என்றால், பெரிய சதுரத்தின் பரப்பளவு (சதுர சென்டிமீட்டரில்) எவ்வளவு?



(A) $\sqrt{2}$ (B) $2\sqrt{2}$

(C) 4 (D) 2

53. ஒரு வட்டத்தின் மீது 10 புள்ளிகள் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கிடையே வரையக்கூடிய அதிகபட்ச நாண்களின் எண்ணிக்கை என்ன?

(A) 55 (B) 45


(C) 50 (D) 25

54. கீழ்க்கண்டவற்றுள் எது பகா எண் ஆகும்?

(A) 97 (B) 87

(C) 91 (D) 51

55. படத்தில், A மற்றும் B ஆகியவை சதுரத்தின் பக்கங்களின் மையப்புள்ளிகள் ஆகும். நிழலிடப்பட்ட முக்கோணத்தின் பரப்பளவு (சதுர சென்டிமீட்டரில்) என்ன?




(A) 1 (B) 2

(C) 3 (D) 4

56. 200 முட்டைகள் கொண்ட ஒரு கூடையில் இருந்து கெட்டுப்போன முட்டை கிடைப்பதற்கான நிகழ்தகவு 0.025 எனில், கெட்டுப்போன முட்டைகளின் எண்ணிக்கை என்ன?

(A) 5 (B) 12

(C) 10 (D) 15

57. 20 பேர் ஒரு வேலையை 10 நாட்களில் முடித்தால், அதே வேலையை 25 பேர் எத்தனை நாட்களில் முடிப்பார்கள்?

(A) 9 (B) 8

(C) 7 (D) 6

58. ஒரு எண்ணின் ஐந்தில் ஒரு பங்கை அதே எண்ணுடன் கூட்டினால், கிடைக்கும் விடை 60 ஆகும். அந்த எண் என்ன?

(A) 40 (B) 45

(C) 50 (D) 55

59. 7-ன் முதல் 11 மடங்குகளின் சராசரி என்ன?

(A) 42 (B) 35

(C) 49 (D) 63

60. ஒரு நாட்காட்டியில் நான்கு எண்கள் கொண்ட ஒரு சதுர வடிவம் குறிக்கப்பட்டுள்ளது. அந்த எண்களின் கூடுதல் 56 எனில், மிகப்பெரிய எண் எது?

(A) 10 (B) 17

(C) 18 (D) 11

61. ஒரு வயது வந்த மனிதரின் உடலில் சராசரியாக எத்தனை லிட்டர் இரத்தம் உள்ளது?

(A) 1 முதல் 2

(B) 5 முதல் 6

(C) 8 முதல் 10

(D) 7 முதல் 8

62. மனித இதயம் எத்தனை அறைகளைக் கொண்டுள்ளது?

(A) 2 (B) 3

(C) 4 (D) 5

63. மனித உடலில் எத்தனை விலா எலும்புகள் உள்ளன?

(A) 6 (B) 12

(C) 18 (D) 24

64. மனிதர்களில் இயல்பான இரத்த அழுத்தம் எவ்வளவு?

(A) 160/50 mmHg (B) 120/80 mmHg

(C) 150/100 mmHg (D) 123/60 mmHg

65. மனித இரைப்பையில் சுரக்கும் அமிலத்தின் பெயர் என்ன?

(A) ஹைட்ரோகுளோரிக் அமிலம்

(B) சல்பூரிக் அமிலம்

(C) அசிட்டிக் அமிலம்

(D) சிட்ரிக் அமிலம்

66. பின்வருவனவற்றில் வைட்டமின் C-யின் மற்றொரு பெயர் எது?

(A) பைரிடாக்சின் (B) பைரிடாக்சமைன்

(C) ஃபார்மிக் அமிலம் (D) அஸ்கார்பிக் அமிலம்

67. கீழ்கண்டவற்றில் எதன் குறைபாடு 'ரிக்கெட்ஸ்' (எலும்புருக்கி நோய்) நோயை ஏற்படுத்துகிறது?

(A) வைட்டமின் D (B) வைட்டமின் C

(C) வைட்டமின் B (D) வைட்டமின் A

68. தைராய்டு சுரப்பியின் செயல்பாட்டை ஒழுங்குபடுத்தும் கனிமம் (mineral) எது?

(A) அயோடின் (B) சோடியம்

(C) பொட்டாசியம் (D) சோடியம் குளோரைடு

69. சூரிய ஒளியின் மூலம் உடலில் எந்த வைட்டமின் (vitamin) உற்பத்தி செய்யப்படுகிறது?

(A) வைட்டமின் A
(B) வைட்டமின் B
(C) வைட்டமின் C
(D) வைட்டமின் D

70. பின்வருவனவற்றில் எது பசுமை இல்ல வாயு அல்ல?

(A) கார்பன் டை ஆக்சைடு
(B) மீத்தேன்
(C) நைட்ரஜன்
(D) நைட்ரஸ் ஆக்சைடு

71. பின்வருவனவற்றுள் எந்த எரிபொருள் மிகக் குறைந்த சுற்றுச்சூழல் மாசுபாட்டை ஏற்படுத்துகிறது?

(A) டீசல்
(B) பெட்ரோல்
(C) ஹைட்ரஜன்
(D) நிலக்கரி

72. போபால் பேரழிவின் போது எந்த நச்சு வாயு வெளியேறியது?

(A) ஆக்ஸிஜன் ஐசோசயனேட்
(B) கார்பன் டை ஆக்சைடு
(C) கார்பன் மோனாக்சைடு
(D) மெத்தில் ஐசோசயனேட்

73. சர்வதேச பல்லுயிர் பெருக்க நாள் எப்போது கொண்டாடப்படுகிறது?

(A) மே 22
(B) ஜூன் 5
(C) ஏப்ரல் 21
(D) ஜூலை 6

74. ஒரு குறிப்பிட்ட புவியியல் பகுதியில் மட்டுமே காணப்பட்டு, உலகின் வேறு எங்கும் காணப்படாத தாவரங்கள் மற்றும் விலங்குகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(A) ஏலியன் ஸ்பீசிஸ் (alien species)
(B) இன்வேசிவ் ஸ்பீசிஸ் (invasive species)
(C) எண்டமிக் ஸ்பீசிஸ் (endemic species)
(D) பவுண்டேஷன் ஸ்பீசிஸ் (foundation species)

75. பின்வருவனவற்றுள் எது அலோகம் ஆகும்?

(A) ஃபெர்ரம் (B) லித்தியம்

(C) அயோடின் (D) ருபீடியம்

76. அறை வெப்பநிலையில் திரவ நிலையில் காணப்படும் உலோகம் எது?

(A) லித்தியம் (B) பாதரசம்

(C) பொட்டாசியம் (D) கால்சியம்

77. சர்க்கரையில் உள்ள தனிமங்கள் யாவை?

(A) கார்பன், ஹைட்ரஜன், ஆக்ஸிஜன்

(B) ஹைட்ரஜன், ஆக்ஸிஜன், நைட்ரஜன்

(C) கார்பன், சோடியம், ஹைட்ரஜன்

(D) கார்பன், ஹைட்ரஜன், நைட்ரஜன்

78. ஒளிச்சேர்க்கையில் வாயு நிலை விளைபொருள் எது?

(A) நீராவி

(B) கார்பன் டை ஆக்சைடு

(C) ஆக்ஸிஜன்

(D) ஹைட்ரஜன்

79. இரும்பு (iron) என்ற உலோகத் தனிமத்தின் வேதியியல் பெயர் என்ன?

(A) வுல்ஃப்ரம் (Wulfrum)

(B) ஃபெர்ரம் (Ferrum)

(C) அர்ஜென்டம் (Argentum)

(D) குப்ரம் (Cuprum)

80. பின்வரும் உலோகக் கலவைகளில் எது ஈயத்தைக் (lead) கொண்டுள்ளது?

(A) விட்டாலியம் (B) பித்தளை

(C) இன்வார் (D) சோல்டர்

81. உயிர்நெட்டெழுத்தின் மாத்திரையைக் குறிப்பிடுக.

(A) 1
(B) 5
(C) 3
(D) 2

82. மெல்லின எழுத்து எது?

(A) க
(B) ச
(C) ட
(D) ங

83. 'வந்தனர்' என்பதன் காலத்தைச் சுட்டுக :

(A) இறந்தகாலம்
(B) நிகழ்காலம்
(C) எதிர்காலம்
(D) எதுவுமில்லை

84. மரபுச் சொல்லை இணைக்க : சாவி

(A) கொத்து
(B) குலை
(C) கூட்டம்
(D) கெட்டு

85. நான் புத்தகம் ________.

(A) எழுதினேன்
(B) எழுதினாய்
(C) எழுதுவாய்
(D) எழுதுவீர்

86. பிரித்தெழுது : கருங்கோழி

(A) கருமை + கோழி (B) கருங் + கோழி

(C) கரும் + கோழி (D) கரு + கோழி

87. சேர்த்தெழுது : பசுமை + தமிழ்

(A) பைந்தமிழ் (B) பசுந்தமிழ்

(C) பசுங்தமிழ் (D) பசும்தமிழ்

88. தமிழுக்கு மொழிபெயர்க்க : National Highway

(A) தேசிய நெடுஞ்சாலை (B) போக்குவரத்து

(C) தேசியம் (D) சாலை போக்குவரத்து

89. தன்மை ஒருமை எது?

(A) நீ (B) நான்

(C) நீர் (D) நாங்கள்

90. சிறுபொழுதின் கூறு எது?

(A) ஆண்டு

(B) வாரம்

(C) நாள்

(D) இரவு

91. மகாவிஷ்ணு கோயிலின் கொடிமரத்தின் மேல் என்ன நிறுவப்பட்டுள்ளது?

(A) கருடன்
(B) ஐராவதம்
(C) வாசுகி
(D) ரிஷபம்

92. செங்கனூர் மகாதேவர் கோவிலில், திருப்புத் சடங்கின் போது அம்மன் இடம் பெயர்ந்திருக்கும் சன்னதி எந்த திசையில் உள்ளது?

(A) தெற்கு
(B) மேற்கு
(C) கிழக்கு
(D) வடக்கு

93. கேரளாவில் முதலில் கருவறையை திறக்கும் கோயில் எது?

(A) திருக்கண்டியூர்
(B) திருவாமணபுரம்
(C) திருவார்ப்பு
(D) திருநெல்லி

94. வெளிச் சுவரின் மற்றொரு பெயர்:

(A) பாஹ்யஹாரா
(B) மரியதா
(C) மத்தியஹாரா
(D) அந்தர் மண்டலம்

95. எந்த வேதம் இசையுடன் தொடர்புடையது?

(A) அதர்வ வேதம்
(B) யஜுர் வேதம்
(C) ரிக் வேதம்
(D) சாம வேதம்

96. மாகிஷ்மதி யாருடைய மகள்?

(A) வசிஷ்டர்
(B) அங்கீரஸ்
(C) விஸ்வாமித்ரா
(D) துர்வாசா

97. த்வஜயோனி வகைப்பாட்டின் அடிப்படையில் கருவறை (ஸ்ரீகோவில்) எந்த திசையில் உள்ளது?

(A) தெற்கு
(B) மேற்கு
(C) கிழக்கு
(D) வடக்கு

98. அத்வைத தத்துவத்தை முன்னிறுத்தியவர் யார்?

(A) கிருபாச்சார்யா
(B) மத்வாச்சார்யா
(C) சங்கராச்சாரியார்
(D) துரோணாச்சாரியார்

99. பின்வருவனவற்றில் எது நவதா பக்தி இல் சேர்க்கப்படவில்லை?

(A) சாந்தம்
(B) அர்ச்சனம்
(C) தாஸ்யம்
(D) சக்யம்

100. ஆடுகளையில் நின்னு அரங்கதேக்கு நாடகத்தை எழுதியவர் யார்?

(A) மன்னத் பத்மநாபன்
(B) K. கேளப்பன்
(C) ஸ்ரீ நாராயண குரு
(D) V.T. பட்டத்திரிபாட்

---